புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# நீதி இலக்கியம் காட்டும் தமிழ்ப் பண்பாடு

ப. ஸ்ரீராம்,
உதவிப் பேராசிரியர்,
தொன் போஸ்கொ கல்லூரி (இருபாலர்),
ஏலகிரி மலை, திருப்பத்தூர் மாவட்டம்,

ஆய்வுச்சுருக்கம்

சங்க மருவிய கால இலக்கியம் அல்லது நீதி இலக்கியம் என்பது சங்க காலத்திற்குப் பின் களப்பிரர்களின் படையெடுப்பிற்குப் பின் ஏற்பட்ட சமூகத்தில் நிழவிய சூழலையும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக பல சிக்கல்களுக்கு ஆளானார்கள் அங்கு உள்ள மக்களுக்கு நீதியை போதிக்கும் வகையில் தோன்றிய இலக்கியங்கள் ஆகும். அப்படிப் பட்ட இச்சமூகத்தில் மக்களுக்கு நீதியைப் புகட்ட தம் பழைய பண்பாட்டினை நினைவுக்கூறும் விதமாக இவ்விலக்கியங்கள் அமைகின்றன. இவ்விலக்கியங்களில் வெளியாகும் பண்பாட்டு எச்சங்களை மையாமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## முன்னுரை

நீதி இலக்கியங்கள் தோன்றியக் காலக்கட்டத்தில் மக்கள் உலக வாழ்வில் பற்றுக்கொண்டு அற வழியில் நின்று பொருளை ஈட்டி அப்பொருள் கொண்டு இன்பம் துய்த்தனர். பிற சமயக்கலப்பால் ஏற்பட்ட சமூதாய மாற்றத்தால் மக்கள் புவி உலக வாழ்வின் மீது வெறுப்புற்று விண்ணக வாழ்வின் மீது நாட்டம் செழுத்த ஆரம்பித்தனர். புவியில் தாங்கள் வாழும் வாழ்க்கையில் இவ்வாறு வாழ வேண்டும் என எல்லை வகுத்து வாழ்ந்தனர். அந்த வரையபடுத்திய வாழ்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கலாறுகளாக அமைந்த இலக்கியங்கள் நீதி இலக்கியங்கள் ஆகும், இவற்றில் வெளியாகும் பண்பாட்டு கூறுகளை இனம் கானும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## நாலடியார் வழி வெளியாகும் உயர் பண்பாடு

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்பதில் நாலடியார் திருக்குறளுக்கு நிகராக வைத்துப் போற்றப்பட்டுள்ளது. 3 பிரிவுகளும் 40 அதிகாரங்களும் 400 பாடல்களும் கொண்ட ஒரு தொகுப்பு நாலடியார் ஆகும். நாலடி நானூறு என்னும் சிறப்புப் பெயரும் கொண்ட ஒரு நூல் ஆகும். இந்நூல் மனித வாழ்வின் எல்லா நிலைக்கும் ஏற்புடையக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டது. நீதியை வழியுறுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட போதும் மக்கள் வாழ்ந்த அல்லது வாழ வேண்டிய வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் கூற விழைகிறது. நிலையாமையை உணர்த்த பலவகையான பாடல்கள் கையாளப்பட்டுள்ளன. இந்த புவியுலகில் செல்வம் என்பது நிலையில்லா தன்மைக் கொண்டது என்பதையும் அதன் பின் உங்கள் கவனத்தை செலுத்த வேண்டா என்பதையும் கீழ் வரும் பாடலின் வழியாக குறிப்பிடுகின்றனர்.

"அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்"[1]

இந்த வாழ்வில் செல்வம் என்பது நிலையில்லாத தன்மைக் கொண்டது அது சகடக்கால் போல உயர்ந்தும் தாழ்ந்தும் ஒருவரிடம் வந்து செல்லும் நிலையற்ற தன்மைக் கொண்டது. மேலும்

*நாலடியாரில் செல்வம், இளமை, யாக்கை ஆகிய மூன்றும் நம் வாழ்வில் நிலைப்பெறாத தன்மை கொண்டது என்னும் உயர் சிந்தனையை எடுத்துக் கூறுகிறது.*

*"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"*[2]

*என்னும் கலித்தொகையின் அடிகளை இங்கே நினைவுக்கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். மேற்கண்ட அடியானது பண்பாடு என்பதை நம் முன்னோர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து அதன் படி நடக்க விழைதல் என்பதை விளக்க முற்படுகின்றது. அதன் வழி நம் முன்னோர்களின் வாழ்க்கையை நீதி இலக்கியங்கள் நினைவூட்டுகின்றது என்று ஒருவாறு யூகம் செய்துப் பார்த்தால், நம் முன்னோர்களின் நாகரிகம் இன்னது என்பதை நம்மால் அறிய முடியும். அவர்கள் வாழ்ந்த சமூதாயம் அழிந்துப்படுதல் என்னும் தன்மைக்கு செல்லும் போது, நம் மக்களின் அறிவில் முதிர்ந்த சமூகத்தையும் அவர்களின் பண்பாட்டையும் நினைவுகூர்ந்து அதன் வழி நீதியைப் போதித்தல் நீதி இலக்கியத்தின் பயனாக நாம் வரையறுத்துக் கொள்ளலாம். வாழ்க்கையின் மீது உள்ள புறிதலை கீழ்கண் டவாறு நாலடியார் விளக்க முற்படுகிறது.*

*"எனக்குத் தாய் ஆகியாள் என்னைஈங் கிட்டுத்*
*தனக்குத் தாய் நாடியே சென்றாள் – தனக்குத்தாய்*
*ஆகியவளும் அதுவானாள்......"*[3]

*என் தாயார் என்னை இங்கு விட்டுத் தன் தாய் சென்ற திசை நோக்கிச் சென்றாள், இந்த பூமியில் ஜனனத்திற்கு நிகராக மரணமும் நிகழ்ந்துக் கொண்டு இருக்கின்றது என்பதையும் மக்கள் உணர்ந்த வண்ணம் இருந்தனர் எல்லோரும் ஒரு நாள் இறக்கும் நிலை ஏற்படும் ஆகவே வாழ்க்கையை வாழும் போதே பிற நிலையற்ற பொருட்கள் மேல் கவணம் செழுத்தாமல் உன்மைப்பொருளின் மேல் கவணம் செலுத்துங்கள் என்பதை நாலடியார் எடுத்து இயம்புகிறது.*

*"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது*
*பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி*
*ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்*
*மருவுமின் மாண்டார் அறம்"*[4]

*இந்த வாழ்க்கை இன்றோ அல்லது என்றோ முடிந்து விடும் என்று தினம் தினம் எமன் வருவான் என்று இல்லாமல் அவன் நம் பின்னால் தான் இருக்கான் என்று எண்ணி நாளும் நல்லறம் புரிய வேண்டும். அறம் புரிதல் நம் மக்களின் பண்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளை அற வழியில் ஈட்டி அதன் வழியாக இன்பத்தைப் பெற்று வீடுபேறடைதல் வேண்டும் என்னும் தலையாய கருத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.*

*வள்ளுவரின் அகம் சார் மற்றும் அறம் சார் பண்பாடு*

*உலகப்பொதுமறை என்று மக்களால் அறியப்படும் நூல் திருக்குறள் ஆகும், 'அ' கரத்தில் தொடங்கி 'ன' கரத்தில் முடியும் சிறப்புடையது. 3 பால் 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டது. உண்மைப் பொருளாகிய அறம், பொருள், இன்பம் குறித்து வள்ளுவனை விட வேறு யாராலும் சிறப்பாக சொல்லிவிட இயலாது என்றால் அது மிகை ஆகாது. உலக முழுக்க இருக்கும் அனைவரும் எங்கள் மத்ததை சார்ந்தவை எனப் போற்றும் ஓரே நூல் திருக்குறள் ஆகும்.*

*வாழும் மனிதர்களுக்கு அறத்தை பின்பற்றி வாழ்வதை விட இந்த பூமியில் சிறந்த வழியில்லை என்பதை வள்ளுவர் நன்கு உணர்ந்து இருந்தார் எனலாம்.*

*'அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லை கேடு'*[5] *- குறள் – 32*

*இந்த வாழ்க்கையில் மனிதனுக்கு அறத்தைப்போல் உயர்வைத் தருவது வேறு இல்லை அதனை மறந்தால் அதனை விட கேடும் இல்லை என பொருள் கூற விழைகிறார். திருக்குறள் வழி மனிதர்களுக்கு மேன்மை மிக்க பண்பாட்டை நம்மால் எடுத்துக் கூற முடியும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை வள்ளுவன் அறிந்திருந்தான் என்பதாலேதான் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து என்று சிறப்பித்துள்ளனர்.*

*'இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்*
*துன்பத்துள் துன்பங் கெடின்'*[6] *- குறள் – 854*

*துன்பங்களில் எல்லாம் பெரிய துன்பம் மன வேறுபாடு காரணமாக ஏற்படுகின்ற பகை உணர்வு ஆகும். இவ்வுணர்வு கெட்டுவிட்டால் இன்பங்களில் எல்லாம் இன்பம் பெற்றவனாக*

கருதப்படுவான். மனித மனம், உடல், அவனின் செயல்பாடு என அனைத்தையும் குறித்து ஆராய்ந்து எழுதியவர் வள்ளுவர் ஆவார். சில இடங்களில் அவருடைய கருத்து மற்றும் உவமை செரிவு காரணமாக வள்ளுவர் ஒருவரா? என்ற ஐயம் கூட ஏற்படும். மனிதனின் நீக்கப்பட வேண்டிய குணங்கள் என சிலவற்றை வள்ளுவர் தொகுத்துச் செல்கிறார்.

'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்'[7] - குறள் – 35

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் இந்நான்கும் மனிதனை அற வழியில் செல்லவிடாமல் தவிர்க்கவல்லது எனவே அவற்றை தவிர்த்து ஒழுகுவதே சிறந்த அறமாகும். எனவே மனிதன் தன் வாழ்க்கையில் எவ்வாறு உயர்ந்த ஒழுக்கலாறுகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை வள்ளுவர் வலியுறுத்திச் செல்கிறார் எனலாம்.

'பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டூதியம் போக விடல்'[8] - குறள் – 831

அறியாமை என்பது என்ன என்ற கேள்விக்கு வள்ளுவர், தனக்கு கெடுதல் தருவதை ஏற்றுக்கொள்வது என்பது விளக்கம் கொடுக்கிறார். இதுவரை மேற்கண்ட குறள்கள் அனைத்தும் அறமும் மனித மனம் குப்பையாக இருக்கக் கூடாது என்பதையும் வள்ளுவர் விளக்க முற்படுகிறார். இதனை அடுத்து வள்ளுவரின் அகவாழ்க்கை பண்பாடு குறித்து காண்போம்.

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'[9] - குறள் – 1151

மேற்கண்ட குறள்களை வள்ளுவரின் அக வாழ்க்கைப் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக கொள்ளலாம். என்னைப் பிரிவதில்லை என்றால் என்னிடம் சொல், பிரிந்து சென்று சீக்கரம் வருவேன் என்பதை எல்லாம் நீ வரும்போது உயிரோடு இருப்பார்களே அவர்களிடம் சொல் என்று அக வாழ்வில் வள்ளுவரின் கருத்துக்களில் அதீத உவமையை பயன்படுத்தியுள்ளார்.

'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்'[10] - குறள் – 1121

மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய பற்களில் ஊறிய நீர் பாலுடன் தேனைக் கலந்தாற் போன்றதாகும். இவ்வாறு வள்ளுவரின் குறட்களில் வெளியாகும் கருத்துக்கள் வழி அகம் சார் பண்பாட்டையும் அறம் சார் பண்பாட்டையும் நம்மால் பார்க்க முடிகிறது.

### இனியவை நாற்பது உணர்த்தும் பண்பாடு

பூதஞ்சேந்தனார் இயற்றி இனியவை இன்னின்னவை என்று 40 பாடல்களில் தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளது ஆகும். ஒவ்வொரு பாடலிலும் 3, 4 இனியக் கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

'இளமையை மூப்பு என்று உணர்தல் இனிதே
கிளைஞர்மாட்டு அச்சு இன்மை கேட்டல் இனிதே
தடமென் பணை தோள் தளிர் இயலாரை
விடம் என்று உணர்தல் இனிது'[11] – இனியவை நாற்பது – 38

இளம் வயதில் முதிர்ந்த அறிவைப் பெறுதல் இனிது என்றும் சுற்றத்தார்கள் அன்பு மொழி கூறுபவராக அமைவது இனிது. மென்மையான மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட பிற மகளிர் நச்சைப் போன்றவர் எனத் தெளிந்து விலகிவிடுதல் இனிது என பூதஞ்சேந்தனார் விளக்க முற்படுகின்றார். இந்த பாடல் வழியாக பெண் அடிமைக்கான முன்னெடுப்புகள் தொடங்கியதாக கொள்ளலாம் இங்கு தொடங்கி பெண்கள் தொடுக்கப்படும் அடிமைத்தனம் மேலோங்கி வளர்ந்தது.

### முடிவுரை

நீதி இலக்கியம் வழியாக நீதியை போதிக்க முயன்றனர் என்றாலும் அதற்கு உள் மக்கள் தங்கள் வாழ்ந்த வாழ்வின் உயர் பண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த கட்டுரை வழி நீதி இலக்கியங்களாக தனக்குள் கொண்ட நூல்களில் சிறப்புப் பெற்ற திருக்குறள் நாலடியார் போன்ற நூல்களை கொண்டு அதன் வழியாக மக்களின் குணநலன்கள் அவர்கள் பின்பற்ற வேண்டிய

பழக்கங்கள் மக்களின் அக வாழ்க்கை என இலக்கியத் தரவுகள் வழி வந்த செய்திகள் சிலவற்றை இங்கே கொடுக்க முயற்ச்சித்துள்ளோம்.

துணை நூற்பட்டியல்


1. சுந்தர சண்முகனார், நாலடியார் நயவுரை, புதுவைப் பைந்தமிழ் பதிப்பகம், புதுச்சேரி
2. http://vaiyan.blogspot.com/2017/06/133-kalitogai-133.html?m=1
3. சுந்தர சண்முகனார், நாலடியார் நயவுரை, புதுவைப் பைந்தமிழ் பதிப்பகம், புதுச்சேரி
4. சுந்தர சண்முகனார், நாலடியார் நயவுரை, புதுவைப் பைந்தமிழ் பதிப்பகம், புதுச்சேரி
5. அறன்வலியுறுத்தல் - அதிகாரம் - திருக்குறள் (thirukkural.net)
6. இகல் - அதிகாரம் - திருக்குறள் (thirukkural.net)
7. அறன்வலியுறுத்தல் - அதிகாரம் - திருக்குறள் (thirukkural.net)
8. பேதைமை - அதிகாரம் - திருக்குறள் (thirukkural.net)
9. பிரிவாற்றாமை - அதிகாரம் - திருக்குறள் (thirukkural.net)
10. காதல் சிறப்புரைத்தல் - அதிகாரம் - திருக்குறள் (thirukkural.net)
11. https://arangameena.blogspot.com/2023/08/blog-post_72.html?m=1


********* ********* ********** ********* ********* ********** ********** **********